**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**
**CC No. 508/2024**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw2/Pw2 |
| Name | : Ramya |
| Father/Husband's Name | : Deivasigamani |
| Village | : |
| Taluk | : Maraimalai Nagar |
| Calling | : |
| Age | : 29 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23.01.2026.

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் மறைமலைநகரில் குடியிருந்து, மளிகை கடை நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது வீட்டிற்கு பக்கத்து தெருவில் வசித்து வருகிறார். நான் கடந்த 21.06.2024 அன்று பகல் 3 மணியளவில் ஆஜர் எதிரி எனது கணவரை ஆஜர் எதிரியுடைய தந்தை சேகர் என்பவரை அவர் வீட்டிற்கு சென்று கூப்பிட்டார். அப்போது சேகர் அவர் வீட்டில் இல்லை. அவர் மகள் முத்தமிழ் மட்டும் வீட்டில் இருந்தார். பின்னர், எனது கணவர் முத்தமிழை பார்த்து அப்பா வந்தால் தான் வந்து போனதாக சொல்லும்படி சொல்லிவிட்டு வந்தார். அதன் பின்னர், எனது மகனை பள்ளியிலிருந்து அழைத்து வர எனது கணவர் அவருடைய இருசக்கர வாகனத்தை எடுத்து கொண்டு எங்கள் வீட்டை விட்டு வெளியில் எனது வாசல் அருகே சென்ற போது, அப்போது ஆஜர் எதிரி ஒத்தா தெவிடியா என்று அசிங்கமாக திட்டி, எனது கணவரின் கண்ணின் கீழே குத்திவிட்டார். அப்போது, என்னையும் பார்த்து ஒத்தா தெவிடியா என்று அசிங்கமாக திட்டி கொன்றுவிடுவேன் என்று மிரட்டிவிட்டு சென்றார். அப்போது, நான் எனது கணவரின் கண்ணில் ரத்தம் வருவதை பார்த்து, அவரை எஸ்ஆர்எம் தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அப்போது என் கணவர் சிகிச்சைக்கு தாமதம் ஆகும் என்றும், குற்றவியல் வழக்கு ஆகுமோ என்றும், நினைத்து சிகிச்சை அளித்த மருத்துவரிடம் கம்பியால் குத்திவிட்டதாக சொன்னார். அதன் பிறகு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேற்படி

சம்பவம் தொடர்பாக எனது கணவர் காவல்நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

சம்பவத்தை நான் நேரிடையாக பார்த்தேன் என்றால் சரிதான். புகாரில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது கணவர் மளிகை கடை எங்கு வைத்துள்ளார் என்றால் கோகுலாபுரத்தில் வைத்துள்ளார். கடைக்கும், வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் நடந்து போக கூடிய தூரம். எனது மகன் சிவானந்த ராஜாராம் பள்ளியில் 2ம் வகுப்பு படிக்கிறார். பள்ளியிலிருந்து எனது கணவர் தான் அழைத்து வருவார். எனது கணவர் 3 மணியளவில் வீட்டியிலிருந்து கிளம்பி 4 மணியளவில் அழைத்து வருவார். எனது கணவருக்கு எந்த இடத்தில் காயம் ஏற்பட்டது என்றால் வலது கண்ணில் காயம் ஏற்பட்டது. நான் எவ்வாறு எனது கணவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்றால் இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றேன். மேற்சொன்ன விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் நான் புகார் கொடுக்கும் போது விசாரித்தார்கள். சேகர் என்பவர் வீட்டில் இல்லை என்று தெரிந்து தான் எனது கணவர் அவரின் வீட்டிற்கு சென்றார் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கு எந்த சம்பந்தமுமில்லை என்றாலும், புகார்தாரர் எனது கணவர் என்பதால் அவருக்கு அனுசரனையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அவ்வாறு சம்பவம் நடந்திருந்தால் அன்றைய தினமே புகார் கொடுத்திருப்பேன் என்றாலும், அவர்கள் வீட்டில் புகார் கொடுக்கிறார்களா என்று பார்த்துவிட்டு தாமதாக புகார் கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open
court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

sd/-S.Sahaana

Judicial Magistrate No.II,
Chengalpattu.